காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

11-12-66

ஊதாண்டுக்கு ஐந்தாண்டு

1961-ல் விபத்துக்குள்ளாகி இறந்த ஹாமர்ஷீல்டை அடுத்து ஐ.நா. தலைவர் பதவிக்கு வந்த ஊதாண்ட் கடந்த 3-ந்தேதிமுதல் மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளார்.

57 வயதாகியிருக்கும் இந்த முன்னாள் பள்ளித் தலைமை ஆசிரியர் தொடர்ந்து உலகின் அரசியல் பெரும் பள்ளிக்கூடத்தைக் கட்டிக் காக்கவேண்டிய பொறுப்புக்கு ஆளாகியுள்ளார்.

மீண்டும் தலைவர் பதவி தொடர்ந்து கிடைத்திருப்பதுபற்றி ஊதாண்டோ உலகமோ பாராட்டவோ மகிழவோ தேவையில்லை. ஏனெனில்—இதே பகுதியில் சில கிழமைகளுக்கு முன் குறிப்பிட்டதுபோல—வேறு யாரும் மனமுவந்து முன்வராத நிலையில்—வேறு எவரும் அனைவருக்கும் ஒத்துவராத நிலையில் ஊதாண்ட் மேலும் நீடிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

குழப்பம் தவிர்க்கப்பட்டதற்காக—சிக்கல் தீர்க்கப்பட்டிருப்பதற்காகத்தான் நிம்மதிப் பெருமூச்சு விடவேண்டியிருக்கிறதே தவிர, மகிழவேண்டியது எதுவுமில்லை.

ஐ. நா. பார்வையாளர்கள் கருத்துப்படி பல்வேறு எதிரி நாடுகளின் "ஒரு சமாதான வேட்பாள"ராகத்தான் ஊதாண்ட் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

இவரைப்போல வேறு எவரும் இல்லை; இன்றுள்ள நிலைமைகளுக்கு இவர்தான் சரி; இவரை விட்டாலும் வேறு யாரும் வரத் தயாராயில்லை. என்ற சூழ்நிலைகளின் விளைவாகத்தான் ஊதாண்ட் மேலும் ஐந்தாண்டு நீடிக்கப்பட்டிருக்கிறார்.

உலகஅரசியலில் "நடுநிலைமை"க்கும் பாரபட்சமற்ற தன்மைக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. நடுநிலை அனுசரிக்கிறேன் என்று கூறிக்கொண்டு நிறவெறிக் கொள்கைக்கு தடை ஏதும் காட்டாமல் இருக்க முடியாது. நிறவெறியை அகற்ற வேண்டுமாயின் தென் ஆப்பிரிக்காவைத் தண்டித்துத்தான் ஆக வேண்டும்.

இதுபோன்ற பிரச்சனைகளில் தீவிர நடவடிக்கை எடுக்கும்போதுதான் ஐ. நா. தலைவர் பதவி கேள்விக் குறியாக மாறுகிறது.

ஒருதலையாகச் செல்கிறார் என்றும்—ஒரு சில நாடுகளுக்கு விரோதமாக இயங்குகிறார் என்றும், ஓரிரு நாடுகள் அவரை ஆட்டிப் படைக்கின்றன என்றும் கண்டனங்கள் மட்டும் அல்ல ஒளிவு மறைவான தாக்குதல்களும் எழுகின்றன.

ஹாமர் ஷீல்ட், காங்கோ விவகாரத்தில் காட்டிய முயற்சிகள்—உண்மையான உழைப்பு செலுத்திய தீவிரம்—உலகின் முதல் குடிமகன் என்ற முறையில் அவர் இயங்கிய பாங்கு அனைத்தும் சேர்ந்ததுதான் அவரது முடிவுக்கே காரணமாய் இருந்தது என்ற ஒரு கருத்து இன்றும் உறுதியாக நம்பப்பட்டு வருகிறது என்பதை இங்கு சுட்டிக்காட்டுவதை, ஊதாண்டுக்கு அபாய விளக்கைக் காட்டுவதாக யாரும் பொருள் கொள்ளக்கூடாது.

இப்போது ஊதாண்ட் வியட்நாம் பிரச்சனையில் மிகுந்த நம்பிக்கையுடனும், ஈடுபாடு காட்டும் உணர்வுடனும் வந்திருப்பதாகத் தெரிகிறது.

வியட்நாம் மேற்கு நாடுகளின் கூட்டையே உடைத்திருக்கும் ஒரு பிரச்சனை. அங்கே நிலவும் போர்

நிலைமை பற்றி அவை அனைத்தும் தங்கள் தங்கள் நிலையிலிருந்து ஒரு சிறிதும் மாறி இயங்கத் தயாராயில்லை.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல வியட்நாமில் நேரடியாகத் தொடர்புள்ள மக்கள் சீனு ஐ. நா.-வுக்கு வெளியே நின்றுகொண்டிருக்கிறது—உலக அவை எடுக்கும் எந்த முடிவும் உலகின் முதல் பெரும் பெரிய நாடான அதை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது.

இதையெல்லாம் ஊதாண்ட் உணராதவர் என்று எவரும் கூறிவிட முடியாது. இருந்தும் எந்த நம்பிக்கையில் வியட்நாம் விவகாரத்தைத் தீர்ப்பது முதல் கடமை என முடிவெடுத்திருக்கிறாரோ தெரியவில்லை.

உலகின் பெரும் நாடுகளாகப் பார்த்து ஐ. நா. சபையின் முக்கியத்துவத்தை உணர்ந்தாலொழிய ஐ. நா. தனது தீர்மானத்தை—முடிவை—கருத்தை எந்த ஒரு சிறு பிரச்சனையிலும் செய்து முடிக்காத நிலை இன்று நிலவுகிறது.

ஐ. நா.வுக்குச் சென்றதால் முடிக்கப்பட்ட பிரச்சனைகளின் எண்ணிக்கையைவிட ஐ. நா.வுக்கு வெளியே இருந்து முடிக்கப்பட்டப் பிரச்சனைகள் தான் அதிகம்.

தார்மிக பலமின்மை, பொருளாதார சீர்குலைவு இரண்டும் ஐ. நா. வை வெகுவாகப் பாதித்துள்ளது. உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து வழங்கினாலொழிய ஐ. நா. தலைவராகப்பார்த்து அவைகளை உருவாக்க முடியாது.

இரண்டிலும் இனியும் அதிருப்தி நிலைமைகள் நீடிக்கும் என முன்கூட்டியே உணர்ந்திருப்பதனால் தான் போலும் "இடையில் முடியாத நிலைவந்தால் பதவி விலகிக் கொள்வேன்" என்ற நிபந்தனையின் பேரிலேயே இரண்டாம் முறையும் சம்மதித்திருக்கிறார் ஊதாண்ட்.

அண்மையில்தான் ஐ. நா. சபைக்கு 20 ஆண்டு முடிந்தது. ஏதோ ஒரு காரணம் பற்றி உலகின் மூன்றில் ஒரு பகுதி இன்னமும் அந்த மன்றத்தில் இடம் பெறாமலே இருக்கிறது. மருத்துவரே நோய்வாய்ப்பட்டிருப்பது போல ஐ. நா.வின் இயக்கமே தங்கு தடையுடன்தான் நடக்கிறது.

உலகம் அவ்வப்போது ஐ. நா.வைக் கவனிக்க நேருகிறதே தவிர ஐ. நா. மொத்தமாக உலகத்தைக் கவனித்துக்கொள்ளும் நிலை கிடையாது.

இந்த நிலையில் ஊதாண்ட் மிகுந்த நம்பிக்கையுடன் மீண்டும் அடியெடுத்து வைத்திருப்பதாகத் தெரிகிறது.

தனி வழியில் செல்வோருக்கு நம்பிக்கை தேவைதான்; ஆனால் ஆபத்துக்கள்—பாதகச் சூழ்நிலைகள் இருப்பதை மறந்த தன்னம்பிக்கை இருக்கக்கூடாது.

மதிப்பும் பலமும் இல்லாத ஐ. நா.வைக் கொண்டு 'வியட்நாம்' பிரச்சனைக்கு ஒரு முடிவு காண்பேன் என்று புறப்படுவதைவிட முதலில் உலக மன்றத்துக்கு—அதன் இயக்கத்துக்கு—அதன் முக்கியத்துவத்திற்குத் தேவையான வற்றைத் தேட முயல்வதுதான் நல்லது.

அதிகப் பளுவைத் தூக்குவேன் என புறப்பட்டு உடல் பாதிக்கப்பட்டுத் திரும்புவதைவிட சிறுகச் சிறுகப் பழகி பின்னர் பெரும் பளுவைத் தூக்கும் முறைதான் வெற்றியளிக்கக்கூடியது.

—எஸ், ஆர்.

காஞ்சி

மலர் 3 11—12—66 இதழ் 20

தூதுக்குழுவிற்குப் பிறகு?

கடந்த இரு கிழமைகளுக்குமுன், சேலம் உருக்காலை தொடர்பாக திரு. ம. பொ. சி. தலைமையில் சென்ற பல கட்சியினர் அடங்கிய தூதுக்குழுவுக்குப் பிரதமர் இந்திராகாந்தி பேட்டியளித்துள்ளார். அக்குழு ஒரு கட்சி சார்பில் சென்றதல்ல; பல கட்சியினரும், குறிப்பாகத் தொழிலதிபர் மகாலிங்கம் போன்ற காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இடம்பெற்றிருக்கிறார்கள். எனவே எந்த ஒருவரும் இக்குழுபற்றிக் கட்சிக் கண்ணோட்டத்தில் கருத்தறிவிக்க முடியாது.

உருக்காலை தொடர்பான எல்லா முக்கிய விவரங்களும் அடங்கிய மனு ஒன்றையும் குழுவினர், பிரதமரிடம் அளித்துள்ளனர்.

அவ்வாறு அளிக்கும்போது, நிச்சயம் இம்முறை தங்கள் நியாயமான கோரிக்கை நிராகரிக்கப்படமாட்டாது என்று, இயற்கையாகவே நினைத்திருக்கவும் கூடும்!

அந்த தூதுக்குழு, முழுக்க முழுக்க கழகத்தினரையே உறுப்பினராகக் கொண்டிருந்திருக்குமானால், 'இவர்கள், வடக்கு-தெற்கு என்று பேதமூட்டுபவர்கள்' என ஒரு இகழ்வான பதிலைத் தெரிவித்திருக்கக் கூடும். அப்படிக்கில்லாது, மகாலிங்கம் போன்ற—சமூக ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்படவேண்டும் என்றுகூட கூற விரும்பாதவர் அவர்—பல கட்சியினரும் அதில் பங்கு பெற்றிருப்பதானது, கட்சி வாதங்களுக்கு அப்பாற்பட்ட கோரிக்கையின் வலுவான நியாயத்தை நிலைநாட்டுவதாகும்.

எத்தகைய அரசியல் வண்ணமும் பூசப்படாத துல்லியமான அக்கோரிக்கைபற்றிய மனு, சேலம் திட்டத்திற்கான பொருளாதார வசதிகள்பற்றிய மத்திய அரசின் ஐயத்தை அகற்றுதற்குப் போதுமானதாகும்.

அரசின் இப்போதைய இறக்குமதிக் கொள்கைக்குக்கூட-சேலம் இரும்பாலைத் திட்டம் எந்த அளவுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதையும் மனு சுட்டிக்காட்டுகிறது.

மிக அதிக அளவுக்கு சிறப்பு, மற்றும் கலப்பு எஃகு ரகங்கள் தேவையுடையதாகவும், அதனை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ளும் நிலையிலும் தற்போது இந்தியா இருக்கிறது. இதனால் அந்நியச் செலாவணி மேலும் வீழ்ச்சியடைந்து வருகிறது. அந்நியச் செலாவணியைச் சேமிக்க, இத்தகைய இறக்குமதிகளை உடனடியாகக் குறைத்துத் தீரவேண்டிய அவசரம், எல்லாவற்றுக்கும் முதன்மையானதாகும்.

பிரதமரிடம் கொடுக்கப்பட்ட மனுவில் இதுபற்றி

> "இறக்குமதி தொர்பான வகையில்கூட சேலம் திட்டம், பொகாரோ திட்டத்தைவிட மிக உயர்ந்ததாகும். சேலம் திட்டப்படி. அதன் ஓராண்டுக்கால உற்பத்தி மூலம் மட்டும் திட்டத்தின் தேவைக்காகும் அந்நியச் செலாவணியைப்போல், மூன்று நான்கு மடங்கு ஈட்டித் தந்து, நாட்டையும் காக்கும்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, பிரதமர் இக்கோரிக்கையின் அவசர அவசியத்தை உடனே உணர்ந்திருக்க வேண்டும். ஆனால் நடந்ததென்ன? இயலாமையைத் தோற்றுவிக்கும் ஒருவித புன்னகை!

இறுதியாகப் பிரதமர் வழக்கம்போல், தூதுக் குழுவினரிடம், "முடிந்தால்''—"சந்தர்ப்பம் கிடைத்தால்'' — "ஒருக்கால்'' — "உங்களுக்குத் தெரியும்'' என்பனபோன்ற சொற்களை உகுத்து அனுப்பி இருக்கிறார்,

சேலத்தில் உருக்காலை வேண்டும் என்ற கோரிக்கை, மன அரிப்பின் மீதோ, பிறரது அனுதாபத்தைக் கவரும் நோக்குடனோ எழுப்பப்படவில்லை. பொருளாதார காரணங்களை மையமாய்க் கொண்டுதான் கோரப்படுகிறது. எனவே இது கட்சி அரசியலுக்கு மிக அப்பாற்பட்டதாகும்.

இத்தகைய கோரிக்கைகள்மீது ஆளுவோரின் மனத்தில் கட்சி அரசியலுக்காக எழுப்பப்படுகின்றன என்ற தப்பெண்ணம் உதிக்குமானால், அரசினர் அதனை அகற்றிக்கொண்டு, இலாப நோக்குடன் மட்டுமல்லாது தேவையான முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் உடனடியாகப் புரிந்துகொண்டாக வேண்டும்.

இதுபற்றி எழும் எல்லாவித மனமாச்சர்யங்களையும் அகற்றும் முறையில், மனுவில்—

(1) இது. ஒரு சாத்தியமான—இலாபகரமான திட்டம்;
(2) இது, பிற மாநிலங்களுக்கான பல்வேறுபட்ட உருக்காலைத் திட்டங்களினின்றும் வேறானது;
(3) திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற உற்பத்தி, மற்றவற்றைவிட சிறப்பானதும், தனித்தன்மை வாய்ந்ததுமாகும்;
(4) இதற்காகும் அந்நியச் செலாவணி அதிகமல்ல —ரூ. 40 கோடிக்கும் குறைவே;
(5) இதன் மூலம் எத்தகைய பொருளாதாரத் தொல்லைகளுமில்லை. பல ஜப்பானியர்கள்கூட இத்திட்டத்தில் பங்கேற்க ஆவலுள்ளவர்களாயிருக்கின்றனர்;
(6) மிக முக்கியமான இத்திட்டம், விரைவாக உற்பத்தியையும் தொடங்கக்கூடியது;
(7) இத்திட்டம் குறித்து மாநில அரசினர், தொடர்ந்து வாக்குறுதிகள் கொடுத்துவந்துள்ளனர்.

என்று திட்டவட்டமாகத் தெளிவு படுத்தப்பட்டு, கோரிக்கையின் நியாயமும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிபற்றி பிரதமர் குழுவினரிடம் குறிப்பிட்டபோது, அவர்கள் பொகாரோ திட்டத்தில் முடக்கப்படும் பிரம்மாண்டமான மூலதனத் தொகையைச் சுட்டிக்காட்டி, அத்தொகைமூலம் தென்னாட்டிலே எழுப்பப்பட்டுள்ள அத்துணை உருக்காலைக் கோரிக்கைகளையும் நிறைவு செய்ய முடியும் என்பதுடன், பல நூறுகோடி மீதமுமிருக்கும் என்பதையும் தெளிவுபடுத்தி, கடந்த மூன்று திட்டக் காலங்களிலும் சேலம் திட்டம்பற்றி பேசப்பட்டு

வத்துள்ள நிலைமைகளையும் விளக்கியுள்ளனர். அது மட்டுமல்லாமல், உருக்காலை தொடர்பாக அண்மையில் நடைபெற்ற ஆந்திர கலவரத்தையும், அதற்கு முன்னதாக கர்நாடகத்தில் நடந்த கலவரம் பற்றியும் சுட்டிக்காட்டி — மத்திய அரசு உதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் தானே செய்யப்போவதாகத் தமிழக அரசு கூறியுள்ளதையும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

இவ்வளவுக்குப் பிறகும் பிரதமர் ஒரு பொறுப்பான பதிலைத்தான் கூறியிருக்க வேண்டும்; மாறாக, "முடிந்தால்" — "சந்தர்ப்பங்கள் கிடைத்தால்" என்பன போன்ற வார்த்தைகளால் பதில் சொல்லிக் கொண்ட அரசு இருக்குமானால், மத்திய அரசு, தமிழகத்தை மாற்றாந்தாய் மனப்போக்கிலேயே கருதி நடத்துகிறது என்பது தெளிவாக உணரப்பட வேண்டியதாகும்.

குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்ற திரு. ம. பொ. சி. அண்மையில் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது—

> ஏற்கெனவே, திட்டவட்டமாக முடிவு செய்யப்பெற்று உருப்பெற்றுவிட்டது இத்திட்டம்; 24 ஆயிரம் ஏகர் நிலமும் ஆர்ஜிதம் செய்யப்பெற்று, ரூ, 48 இலட்சமும் செலவழிக்கப்பட்டுவிட்டது. ஆந்திராவில் உள்ள தனி நபர் ஒருவரின் போட்டா போட்டிக்காக இதனை இழுபறி நிலையில் வைத்திருக்கிறார்கள்

என்று மேலும் தெளிவாக விளக்கி இருக்கிறார்.

> "இப்போது பணமில்லை என்கிறார்கள்; முன்பு பணம் இருந்தது — மனம் இல்லை; இனி பணமும் மனமும் இருக்கும் சமயம் இவர்கள் இருக்கமாட்டார்கள்! எனவே தேர்தலுக்குப் பிறகு அமையும் ஆட்சி, இதற்கு ஒரு துணிவான முயற்சி எடுக்கும்படியான ஆட்சியாக இருக்கவேண்டும் — இல்லையென்றால் சேலம் உருக்காலையை இழந்துவிடும் பேரபாயம் காத்திருக்கிறது"

என்றும் வருங்காலம்பற்றித் திட்டவட்டமாகவும் அவர், அக்கூட்டத்தில் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார்.

தூதுக்குழு, தன் கடமையை செவ்வனே ஆற்றியிருக்கிறது; இதற்குப் பிறகும் கோரிக்கைகளை கட்சிப்பிரசார நோக்கமுடையவை எனக்கருதி, மாறான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுமானல்—

> பெற்ற சுதந்திரத்தை வெகு தூரத்துக்கு அப்பால் — அடிவானத்துக்கு அப்பாலும் தூக்கி எறிகிறார்கள் என்றும் நீதி நிர்மூலமாகிறது என்றும் மக்கள் நம்பத் தொடங்கிவிடுவார்கள் என்று அரசுக்கு எச்சரிக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், உணவு விவகாரத்தில் தங்கள் உள்ளத்தை உடைத்துக்கொண்டிருக்கும் இந்நாட்டு மக்களுக்கு இதுவும் இல்லை என்பதுவே இனியும் பதிலாகக் கிடைக்குமானல்—

> 'எப்போதையும்விட மக்கள் இனி இதற்கான நியாயமான திட்டத்தைச் செயற்படுத்தச் சட்டரீதியான மாற்றரசைக் காணவேண்டியவர்களாகிவிடுவார்கள்!

என்பதுடன், டெல்லி சென்று திரும்பிய தூதுக்குழுவுக்குப் பின்னர் தெளிவாகத் தெரிவது வாக்குச்சீட்டுக்களின் மூலம்தான் அரசினரை வழிக்குக் கொண்டுவர முடியும் என்பதுதான்!



தம்பி

உள்ளுணர்வு

எப்படி வாழ்வேன் இனிமேல்!
ஏன் பிறந்தேன் இப்புவியில்!
ஏழைக்கு ஏது இன்பம்!
உழைக்கிறேன்; உழல்கிறேன்!
வாழ வழியின்றித் திகைக்கிறேன்!
முதுகெலும்பு முறிய மூட்டை சுமக்கிறேன்!
குடும்பம் தவிக்கிறது, குமுறிச் சாகிறேன்!
தற்கொலை தவிர வேறு வழி தெரியவில்லை.
சாவே! வா! சர்வேசா! அழைத்துக்கொள்!

இவ்விதமான 'ஓலம்' நாட்டிலே மிகுந்துவிட்டிருக்கக் காண்கின்றோம்.

வயலை வளமாக்குகிறான்; அவன் வாழ்வோ 'பாலை'யாகிக்கிடக்கிறது.

மலையைக் குடைகிறான்; தேக்கம் அமைக்கிறான்; பாதை போடுகிறான்; பல்வேறு பொருளை உற்பத்தி செய்கிறான்; அவனோ பசியுடன் போராடுகிறான்; பட்டினியால் தாக்கப்படுகிறான்.

காலமெல்லாம் உழைக்கிறான், கண்ணீர் வடிக்கிறான்; உழைப்பின் விளைவுகள் வேறு எங்கோ சென்று முடங்கிவிடக் காண்கிறான்; கலக்கங்கொள்கிறான்.

அணி அணியாகத் தொழிற்சாலைகளுக்குச் செல்கிறார்கள், ஆலைச்சங்கு அலறியதும்; நெஞ்சற்ற இயந்திரங்களை நடத்திச் செல்கிறார்கள்; நேர்மையற்ற முதலாளிகள் கொழுத்திட இலாபத்தைக் குவித்துத் தருகிறார்கள்; குடும்பத்துக்குத் தேவைப்படும் ஊதியமும் கிடைக்கப்பெறாது நொந்து கிடக்கிறார்கள்.

நீதி எங்கே! என்று கேட்கிறார்கள். எமது நலனைக் காத்திடும் நேர்மையாளர்கள் எங்கே என்று கேட்கிறார்கள். பெருமூச்சு தவிர வேறு எந்த ஒலியும் பதிலாகக் கிடைக்காது தவிக்கிறார்கள்.

வேலை! வேலை! வேலை! ஓயாத வேலை! உடலையும் உள்ளத்தையும் கசக்கிப் பிழிந்திடும் கொடுமை நிறைந்த வேலை! எல்லாம் ஒரு கவளம் சோற்றுக்காக! அதுவும் கிடைக்காது தேம்புகின்றனர்;

கொளுத்தும் வெய்யில்! கொட்டும் பனி! இடி! மின்னல்! பெருமழை!—எதையும் தாங்கிக்கொண்டு வேலை செய்கின்றனர், பசியைத் தாங்கிக்கொள்ள முடியாதே, பட்டினி கிடக்கும் மனைவி மக்களைக் காத்திடவேண்டுமே என்ற உணர்வு சவுக்காகிவிடுவதால்!

புதிய புதிய தொழிற்கூடங்கள் எழக் காண்கின்றனர்; புது மெருகு பெற்றிடும் பூமான்களை வளரக் காண்கின்றனர்.



காகிதம் செய்வோம், ஆயுதம் செய்வோம், இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவோம், எண்ணற்ற புதுப் பொருள் சமைத்திடுவோம்; செல்வம் பெருகிடச் செய்வோம; நமக்கு உரிய பங்கினைப் பெற்று வாழ்விலே சீர் பெற்றிடுவோம் என்று நம்பிப் பாடுபடுகின்றனர்; மாடாக உழைத்து ஓடாகிப்போவதன்றி, வேறு நிலை காணுது, இதற்கோ இத்தனைக் கடினமாக உழைத்தோம என்று ஏக்கம் கொள்கின்றனர்.

உழைப்பின் விளைவுகளாகப் பல பொருள் மின்னிடக் காண்கின்றனர் நாட்டிலே; வீட்டிலேயோ பசிக்கொடுமையால் பஞ்சடைந்த கண்ணினராகிக் கிடக்கின்றனர்.

எமக்கு வாழ்வு அளித்திடத்தக்க அரசு இல்லையே! எம்மை வாழவைத்திடா இந்த அரசினை எங்கனம் எமது அரசு என்போம்! நல்லரசு என்று எப்படி இதனைக் கூறுவோம் என்று கேட்கின்றனர், விம்மலுக்கு இடையில்.

ஆண்டுக்கோர் முறையோ. நமது அரசு! நல்அரசு! பொதுநலம் பேணிடும் அரசு! புதுவாழ்வு தந்திடும் அரசு! ஜனநாயக அரசு! சோஷியலிசம் தந்திடும் அரசு! — என்று சிந்துபாடி, கொடி ஏற்றுகின்றனர்; கோலாகல விழா நடத்துகின்றனர்,

புள்ளி விவரங்களை, பளபளப்பும் வழவழப்பும் மிக்க ஏடுகளில் அச்சடித்து வழங்குகின்றனர்!

புதிய தொழில் முயற்சிகளைப் பாராட்டி அமைச்சர்கள் பேருரை ஆற்றுகின்றனர்.

நாட்டுச் செல்வத்தைப் பெருக்கிடுவீர்; உற்பத்தி முதலில், உரிய பங்கு பிறகு'—என்று தத்துவ விளக்கம் தருகின்றனர் பேராசிரியர்கள்.

உலகின் பல பகுதிகளிலிருந்து புதுப் புது யந்திரங்கள், விஞ்ஞான நுணுக்க முறைகள், செயல் திறமைகள் தருவிக்கப்படுகின்றன; அதன் பயனாக ஒன்று ஒன்பதாகிறது, வளம் பெருகிக்கொண்டு வருகிறது என்று விளக்கமளித்துப் பேசுகின்றனர், அமைச்சர்கள்!

தொழில் வளம் மிக்க நாடாகிக்கொண்டு வருகிறது நமது நாடு; நமது நாட்டு உற்பத்திப் பொருள் வெளிநாட்டுச் சந்தைகளுக்குச் செல்கின்றன; வெளிநாட்டுத் தொழில் விற்பன்னர்கள் நம் நாட்டு நுண்ணறிவினையும் தொழிலார்வத்தையும், தொழிலாளரின் தனித் திறனையும் வெகுவாகப் பாராட்டுகின்றனர் என்ற தேன் துளிகளைத் தெளிக்கின்றனர் நாடாளும் நல்லோர்கள்!

ஜெர்மனியே வியந்து பாராட்டுகிறது; ரஷியாவே ஆர்வத்துடன் விரும்புகிறது; இங்கிலாந்தே இன்னும் அனுப்புக என்று கேட்கிறது; அந்த அளவுக்கு நமது பொருள்களுக்கு உலகிலே மதிப்பு மிகுந்திருக்கிறது; எல்லாம் எதனால்? காங்கிரசு ஆட்சியினால்! இதனை உணராமல் சிலர், எதிர்த்து வருகின்றனரே! என்ன மடைமை இது! என்ன கொடுமை இது!—என்று முழக்கம் எழுப்புகின்றனர், காங்கிரஸ் முத்திரையைப் பொறித்துக்கொண்டு நா வாணிபம் நடாத்திடக் கிளம்பிடுவோர்.

இந்தச் சிந்துக்கு இடையிலேதான், கிளம்புகிறது, ஐயோ! அப்பா! ஆண்டவனே! சாவு வரவில்லையே! ஏன் பிறந்து தொலைத்தீர்கள்! எங்காவது சென்று செத்துத் தொலையுங்கள்!—என்ற அழுகுரல்!

அவ்வப்போது இதழ்களிலே காணப்படும் 'தற்கொலை' பற்றிய செய்திகள், நாட்டிலே கப்பிக்கொண்டுள்ள இல்லாமையை எடுத்துக் காட்டுகின்றன. காட்டி? கண்ணீர் வடிக்கிறோம்! கணநேரம் கலக்கம் கொள்கிறோம். அந்த நிலை நமக்கு வராமலிருக்க வேண்டுமே என்று கவலை கொள்கிறோம். பிறகோ? இந்த நிலையை மாற்றும் கடமை நம்முடையதாயிற்றே? இது மக்களாட்சிக் காலமாயிற்றே? நாமல்லவா 'அரசு' அமைக்கிறோம்! அப்படி 'அரசு' அமைப்பதிலே நாம் போதுமான அக்கறையும் திறமையும் காட்டினால், இந்த அவதிகளைப் போக்கிக் கொள்ளலாமே என்பது பற்றிய தீவிரம் காட்டுகின்றோமா? இல்லையே! இருந்திருப்பின் இத்தகைய இன்னலா தொடர்ந்து இருபது ஆண்டுகளாக இருந்துகொண்டிருக்கும்?

தம்பி! இந்த முறையாகிலும் இன்னலுக்கு ஆளாகியுள்ள மக்கள், அரசு அமைக்கும் கடமையைச் செம்மையான முறையிலே நடத்தித் தருவார்கள் என்று நம்புகிறோம்; மக்கள் இந்தத் தமது கடமையை நிறைவேற்றுவதற்குத் துணை நிற்கத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆர்வத்துடன் முனைந்து நிற்கிறது. இல்லாமை, போதாமை எனும் இடர்ப்பாடுகளிலே சிக்கிச் சீரழியும் மக்கள், தமது நிலையை மாற்றிக் கொள்ளும் முயற்சியில் நமது கழகத்தைத் தக்கமுறையிலே பயன்படுத்திக் கொள்வார்கள் என்று பெரிதும் நம்பிக்கொண்டிருக்கிறோம்.

ஆனால் இந்த ஏழ்மை நிலைமையையே தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, பணத்தை வீசி ஓட்டுகளைப் பறித்துக்கொள்ளலாம்; இல்லாமையால் தாக்கப்படும் ஏழையிடம் இரண்டு என்பதற்குப் பதில் நான்கு என்று ரூபாய்களை வீசினால், இப்போதைய கஷ்டத்தைப் போக்கிக்கொள்ள இதாவது கிடைத்ததே என்று எண்ணி, ஓட்டுப் போடுவான் என்று காங்கிரஸ் கட்சியினர் எண்ணுகின்றனர். அந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே தேர்தலுக்கான திட்டம் வகுத்துக் கொண்டுள்ளனர்.

நாட்டிலே உள்ள நிலைமை, உலக நாடுகள் நமது நாட்டைப் பற்றி கொண்டுள்ள கருத்து, நமது நாட்டு நிர்வாகம் பற்றி நிபுணர்கள் கூறிடும் கண்டனம, நமது ஆட்சியாளர்களே அவ்வப்போது ஒப்புக்கொள்ளும் குறைபாடுகள், சீர்கேடுகள் ஆகிய எதனைக் கவனித்துப் பார்த்தாலும், இன்றைய ஆட்சி முறை மாற்றப்பட்டாக வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தெரிந்தும், மீண்டும் நாங்களே வெற்றி பெறுவோம் என்று காங்கிரஸ் தலைவர்கள் தெரிவிக்கிறார்கள்.

காரணம் என்ன, அவர்களின் நம்பிக்கைக்கு?

மக்கள் தெளிவற்றவர்கள்; துணிவற்றவர்கள்; விலைகொடுத்து வாங்கிவிடத்தக்கவர்கள் என்ற எண்ணமும்,

காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக ஒரு மாபெரும் சக்தி திரண்டிருக்கிறது, கொதிப்புணர்ச்சி வளர்ந்திருக்கிறது என்ற போதி

லும், கட்சிகள் பலவாக உள்ளன, ஆகவே எப்படியும் காங்கிரசு எதிர்ப்பு ஓட்டுகள் சிதறிப் போய்விடும். இடையிலே நாம் முடி சூட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணமும், காங்கிரசுக்குப் பலமாக இருந்து வருகிறது.

ஆகவே காங்கிரஸ் கட்சி, தன் சொந்தபலம் அல்லது மக்களின் நல்லெண்ணம் ஆகியவற்றிலே நம்பிக்கை கொள்வதைக் காட்டிலும்,

மக்களின் ஏழ்மை நிலைமை

எதிர்க்கட்சிகள் பலவாக இருக்கும் தன்மை

என்பதிலேயே அதிகமான நம்பிக்கை கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு முறை பாராளுமன்றக் கூட்டம் நடைபெறும் போதும் எழுப்பப்படும் பிரச்சினைகள், வெடித்துக் கிளம்பிடும் புகார்கள், கேட்கச் சகிக்காதனவாக உள்ளன.

அமைச்சர்களின் நடவடிக்கைகள், தொடர்புகள் கேலிக்குரியனவாக்கப்படுகின்றன.

தம்பி! சின்னாட்களுக்கு முன்பு கிளறிவிடப்பட்ட ஒரு விஷயத்தைக் கூறலாம் என்று கருதுகிறேன். எதிர்க்கட்சியினர் எடுத்துக் கூறிய அந்தப் புகாரில் ஒரு பகுதியை சர்க்காராலேயே அடியோடுமறுத்துவிட முடியவில்லை:

ராஜஸ்தானத்து முதலமைச்சராக உள்ளவர் சுகாதியா என்பவர்.

திறமை மிக்கவர் என்றும், ஆட்களை வளையக் கட்டக் கூடியவர் என்றும் பாராட்டப்படுபவர்.

அவருடைய பேச்சிலேயும் அதைவிட அதிகமாக அவருடைய பார்வையிலேயும் மற்றவர்களைக் கவ்விக் கொள்ளும் தன்மை இருப்பதை நானே நேரடியாகப் பார்த்தேன்.

ராஜஸ்தான் பல்கலைக் கழகத்தினர் ஜெய்பூரில் நடத்திய ஒரு கருத்தரங்குக்கு நான் சென்றிருந்த போது, சுகாதியா, ஒரு விருந்தளித்தார்; தமது மாளிகையில்.

என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்ததும் நீண்ட காலமாக என்னிடம் பழகியவர் போல, கனிவு காட்டினார்.

"பாராளுமன்ற உறுப்பினர் அல்லவா அண்ணாதுரை! ராஜ்யங்களுக்கு உள்ள அதிகாரங்களைப் பறித்துக்கொண்டுபோய் மத்திய சர்க்காருக்குக் கொடுத்து விடுவாரே!' என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

"இல்லை ஐயா! அதற்குமாறாக நான், ராஜ்யங்களுக்கு முழு அளவு அதிகாரம் தரப்படவேண்டும் என்ற கருத்துள்ளவன்" என்று கூறினேன்; உடனே மிக்க ஆர்வம் காட்டி, "எனக்கும் அதே கருத்துதான்!" என்று கூறினார்; விவரம் பேசலானார்.

எவரிடமும் இலகுவாகப் பழகிடும் இயல்பு படைத்த சுகாதியா ஒரு முறை, தமது மாநிலத்து கனவான் ஒருவர், லால்பகதூர் அவர்களைத் தங்கத்தால் நிறுத்து அந்த தங்கத்தை நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடை தர இசைவதாகவும், லால்பகதூர் அதற்கு ஒரு நாள் குறிப்பிட்டுத் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அந்தத் 'துலாபாரம்' நடைபெறவில்லை: லால்பகதூரும் இன்று இல்லை; ஆனால் வெளியாகி இருக்கும் பயங்கரமான உண்மை என்னவென்றால்,

துலாபாரம் செய்ய விரும்பிய கனவான், தங்கக் கள்ளக்கடத்தல் செய்பவர் என்றும், அந்த கள்ளக்கடத்தல் தங்கத்திலே ஒருபகுதியைத்தான் துலாபாரம் என்ற பெயராலே சர்க்காருக்குக் கொடுத்துவிட்டு, தன்மீது சட்டம் பாயாமல் தடுத்துக்கொள்ள தந்திரத் திட்டமிட்டிருந்தார் என்பதும் இப்போது வெளியாகி இருக்கிறது.

இதிலே சுகாதியாவுக்குத் தொடர்பு உண்டா? பங்கு உண்டா? உடந்தையாக இருந்தாரா? என்பவைபற்றி எதிர்க்கட்சியினர் கிளப்பியவை ஆதாரமற்றவை, வீண் புகார் என்று எடுத்துக் காட்டப்பட்டன என்றபோதிலும், குறிப்பிட்ட அந்தக் கனவானின் மாளிகையும் தோட்டமும் சோதனையிடப்பட்டு, ஐம்பது தங்கக்கட்டிகள்—செங்கற்கள் வடிவம்கொண்டவை—கைப்பற்றப்பட்டன என்பது, சர்க்காரே ஒப்புக்கொண்டாகவேண்டிய உண்மையாகிவிட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட கள்ளக் கடத்தல் பேர்வழிகள்பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம். அவர்களிலே பலர், காங்கிரசுக் கட்சியைக் காத்திடும் "தருமவான்'களாக இருப்பதும் மெய்ப்பிக்கப்படுகின்றன.

இன்று எழுத உட்காருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு இதழொன்றில் பார்த்தேன்,'

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரும் செல்வாக்குமிக்கத்தொழிலதிபருமான ராம்ரதன்குப்தா என்பவரின் தொழிற்கூடம் ஒரு நாள் முழுவதும் இரகசியத் தகவல் இலாகாவினரால் சோதனையிடப்பட்டது என்ற செய்தியினை.

தொழிலதிபர்களின் தோழமையைப் பெற்றிருப்பதால் கோடிக்கணக்கில் காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் நன்கொடைத் தொகை கிடைத்திருப்பதைக்காங்கிரசுத் தலைவர்களே ஒப்புக்கொண்டுள்ளனர். அதற்கான கணக்கும் வெளியிடப்பட்டுவிட்டிருக்கிறது.

ஆக ஒருபுறத்திலே காங்கிரஸ் ஆட்சி ஏழையைத் தத்தளிக்கவிட்டிருக்கிறது; மற்றோர்புறத்திலே கள்ளக்கடத்தல் பேர்வழிகள், தொழிலதிபர்கள் ஆகியோரிடம் நன்கொடை திரட்டி அவர்களை ஆதரிக்கும் விதமான ஒரு சர்க்காரை நடத்தும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்கிறது.

இவ்வளவு வெளிப்படையாக உண்மை தெரிந்திருந்தும், மக்கள் ஆத்திரத்தால் தம்மைக் கவிழ்த்துவிடுவார்களே என்ற அச்சம் ஆளவந்தார்களுக்கு எழக்காணோம். இது வேதனை தரும் விசித்திரமல்லவா?

தொழில் துறையிலும் ஆதிக்கம் வைத்துக்கொண்டு, ஆட்சித்துறையிலும்தொடர்பு வைத்துக்கொண்டு ஒன்றுக்கு மற்றொன்று துணையாக இருக்கும்படி செயலை அமைத்துக் கொள்ளும் சிலர்களும் இருக்கின்றார்கள்.

ஒரிசா மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தவரும், எந்த நேரத்திலும் முதலமைச்சர்களை உண்டாக்கித் தமது கரத்தில் வைத்துக்கொள்ளக் கூடியவருமான பட்நாயக் என்பவர் பற்றிய செய்திகளைத் தம்பி! அடிக்கடி காண்கின்றாய்.

ஒரு சில வருடங்களிலே பல கோடி ரூபாய்களைத் திரட்டிய இலாபவேட்டைக்காரர், இந்த பட்நாயக்.

இவர் பற்றிய புகார்கள் பல! விசாரணைக் குழுவிடம்கூட ஒப்படைக்கப்பட்டன இந்தப் புகார்கள்.

இந்த விசாரணையின்போது வெளிவந்த உண்மைகள், சர்க்காரின் இரகசியங்களாக இருந்துவந்தன; எதிர்க் கட்சியினர் எப்படியோ அந்த விசாரணைக் குறிப்பேட்டைக் கூட வெளியே கொண்டுவந்து விட்டனர்! பாராளுமன்றத்திலேயே அதனை வழங்கவும் செய்தனர்.

இத்தகைய 'புகார்களை' புகழாரமாகக் கொண்டுள்ள இந்தப் பெரியவரைத்தான், ஒரிசாவில் காங்கிரசுக்கு வெற்றி பெற்றளிக்கும் பொறுப்பேற்கும் தலைவராகக் காமராஜர் நியமித்துள்ளார்.

புகார்கள் பலமாக! ஆனால் காங்கிரசின் பெரிய தலைவர் காமராஜரின் அரவணைப்பு இவருக்கு!

எந்த அதிகாரி இந்த நிலையில் பட்நாயக்மீது நெருங்கத் துணிய முடியும்?

விசாரணையா நடத்தப் போகிறீர்கள்! பைத்யக்காரர்களே! என்னிடம் ஒரிசாவையே ஒப்படைத்திருக்கிறார் காமராஜர்! நான் நினைத்தால் ஒரிசாவில் காங்கிரசை ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும். எனக்கு உள்ள அந்த ஆற்றலை அறிந்து அகில இந்திய காங்கிரஸ் தலைவர், முழுப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்! காங்கிரசின் மந்திராலோசனைக் கூடத்தில் எனக்கு நடுஇடம் தரப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட என்மீது உள்ள புகார்களை விசாரிக்கவா துணிகிறீர்கள்?—என்று பட்நாயக் கேட்டிடின், எந்த அதிகாரி, அஞ்சாதிருக்க முடியும்.

நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே! என்று கூறிட ஒரே ஒரு நக்கீரனைத்தானே காட்ட முடிகிறது; நேர்மை அரசோச்சிய நாட்களிலேயே! இன்று யாராக இருந்தாலும் உரிய விலை கொடுத்தால் வாங்கிவிட முடியும் என்ற பேச்சு மிகச் சாதாரணமாகப் பரவியுள்ள நாட்களல்லவா! பட்நாயக்குக்குக் காமராஜர் தந்துவிட்டுள்ள 'இடம்' எத்தனை உயர்வானது என்பதைப் பார்த்த பிறகும், பயப்படாமல், விசாரணை நடத்திட எத்தனை அதிகாரிகளைக் காணமுடியும்.

இவ்வளவு புகார்கள் எவர்மீது எழுந்துள்ளனவோ அவரிடமா, இத்தனைப் பொறுப்பை ஒப்படைப்பது என்று காங்கிரஸ் வட்டாரத்திலேயே சிலர் கேட்கின்றனர். காங்கிரஸ், ஒரிசாவில் வெற்றி பெற வேண்டுமென்றால், பட்நாயக்கிடம் பொறுப்பை ஒப்படைப்பது தவிர வேறு வழி இல்லை என்ற பதில்தான் கிடைக்கிறது.

புகார்கள் அவர்மீது எழும்பியுள்ளது மட்டுமல்ல, ஏராளமான தொகை அவர் செலுத்தவேண்டுமாம்; வருமான வரியாக! அதனை வசூலிக்க முடியவில்லை, இலாகாவினால்; இன்னமும் அதுபற்றிக் கூடக் கேட்கிறார்கள் பதில் என்ன?

அமைச்சர்கள் அளித்திடும் பதில், வசூலைத் துரிதப்படுத்த முயற்சி எடுத்துக் கொள்கிறோம் என்பது.

பட்நாயக் தரும் பதில்? காங்கிரஸ் ஆளவந்தார்களையே கேலி செய்யும்விதமான பதில்! "வருமான வரி பாக்கியா? கேட்கட்டும், தருகிறேன்; நியாயமாக இருந்தால்! இருக்கவே இருக்கிறது கோர்ட்டு! அங்கு சந்திப்போமே" என்கிறார்.

இவை மட்டுமல்ல; தம்பி! பட்நாயக்கின் பல தொழில் அமைப்புகளிலே ஒன்று, கலிங்கா விமான கம்பெனி! இந்தக் கம்பெனியிடம், வடகிழக்கு எல்லைப் பகுதியில் போர்க்காலத்தில் பொருளை எடுத்துச் செல்லும் அலுவல் ஒப்படைக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம், முறைப்படி இல்லை என்றும், வேறு கம்பெனிகள் எதிர்பார்த்ததைவிட அதிகத் தொகை கலிங்கா கம்பெனிக்கு சர்க்கார், கட்டணமாகத் தந்தார்கள் என்பதும், ஒப்பந்தப்படி இந்தக் கம்பெனி ஏற்றுக்கொண்ட காரியத்தைச் சரியானபடி செய்யவில்லை என்பதும், இதனாலே சர்க்காருக்கு வீண் நஷ்டம் விளைந்திருக்கிறது என்பதையும், பொதுக் கணக்குக் கமிட்டி எடுத்துக் காட்டி, சர்க்காரை இடித்துரைக்கிறது.

தர வேண்டிய தொகையைவிட அதிகப் பணம், இந்தக் கம்பெனிக்கு தரப்பட்டது என்றும் கமிட்டி சுட்டிக் காட்டியிருக்கிறது.

இது கேட்டு பட்நாயக் பதறினாரா? பாவிகளா! இப்படியா பழி சுமத்துவது? என்னுடைய கட்சி நடத்திச் செல்லும் சர்க்காருக்கு நானா வீண் நஷ்டம் உண்டாக்குவேன்? என்னை என்ன அத்தகைய சுயநலக்காரன் என்றா எண்ணிக்கொண்டீர்கள்? பணம்தான் பெரிது என்று நானா கருதுபவன்? என்றெல்லாம் கடாவினாரா? இல்லை!

பத்திரிகை நிருபர்கள் இது பற்றிக் கேட்டபோது பட்நாயக் துளியும் பதறாமல் அதிகப் பணம் கொடுத்துவிட்டதா சர்க்கார், கலிங்கா கம்பெனிக்கு? சுத்த அதிர்ஷ்டக்கட்டையான சர்க்கார் ஜாக்ரதையாக நடந்து கொள்ள வேண்டும்! என்று கேலி பேசியிருக்கிறார்.

ஆட்சி நடத்தும் கட்சியிடம் நேசத்தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு, அதனைப் பயன்படுத்தி தொழில் துறையிலே ஆதிக்கம் ஏற்படுத்திக்கொண்டு, முறை தவறுகளைத் துணிவுடன் செய்து, விசாரணை நடத்தப்படும் கட்டம் பிறந்திடின் உருட்டி மிரட்டி சர்க்காரைச் செயலற்றதாக்கி, தமது செல்வாக்கு காங்கிரசுக்குப் பயன்பட வேண்டுமானால், எந்த விதமான கட்டு திட்டமும் தமக்கு விதிக்கக் கூடாது என்று நிபந்தனை போட்டிடும் அளவுக்கு நிமிர்ந்து நிற்கும் கோடீஸ்வரர்கள் பலர் இன்று உள்ளனர்; இவர்களை ஊட்டி வளர்த்துவிட்டதே காங்கிரஸ் கட்சிதான், இன்று

அவர்கள் புருவத்தை நெறித்தால், காங்கிரசின் மூலவர்களுக்கே குலை நடுக்கம் எடுக்கிறது.

தம்பி! விளைநிலங்களிலே புகுந்து களவாடுபவர்களைக் கண்டுபிடிக்கவும், விரட்டவும், காவலாளிகளையும், வேட்டை நாய்களையும் அமர்த்துகின்றனர் பண்ணை முதலாளிகள். இந்தோனீஷியாவில், வயல்களிலே காவல் புரியவும், களவாடுபவர் நுழையாது தடுத்திடவும், நுழைந்திடின், விரட்டிடவும், பயிற்சி அளிக்கப்பட்ட புலிகளை அமர்த்தி இருக்கிறார்களாம்! விசித்திரம் ஆனால் உண்மை.

புலி, பதுங்கிப் பாயும்; மோப்பம் பிடித்து ஆளைத் தாக்கும் அல்லவா! அப்படிப்பட்ட புலிகளை வயல்களிலே காவலுக்கு வைக்கிறார்களாம்; களவாட வருபவனை புலிகள் கண்டுபிடித்து, கடித்துப் போடும் அல்லவா; அதற்காக!

பயிற்சி அளிக்கப்பட்ட வேட்டை நாய்கள், களவாட வருபவனைத் துரத்திவிடும், அல்லது இலேசாகக் காயம் உண்டாக்கி விரண்டோடச் செய்திடும். புலி? ஆள் பிடிபட்டால், விட்டா வைக்கும்? விரட்டி அடிப்பதோடா நின்றுவிடும்? கடித்துக் குதறி, இரத்தத்தைக் குடித்துவிடும்! ஆள், பிழைப்பானா?

புலியை ஏவி ஆளைச் சாகடிக்கும் கொடுமையை, வயலைக் காத்திடும் முறை என்று கருதி, இந்தோனீஷியாவிலே சிலர் மேற்கொண்டுள்ளனர் என்று ஒரு இதழில் படித்தேன். அந்த இதழ், இந்தக் கொடுமையைக் கண்டித்து எழுதியிருந்தது.

காங்கிரசின் மூலவர்கள், தமது கட்சிக்குத் தேர்தலிலே வெற்றி கிடைக்கவேண்டும் என்பதற்காக, இந்த மனிதப் புலிகளை ஊட்டி வளர்க்கின்றனர்!!

இந்த மனிதப் புலிகள் ஏழையின் குருதியைக் குடித்துச் சுவை கண்டு கொழுத்துக் கிடக்கின்றன.

வெறி முற்றிய நிலையில் இந்த மனிதப் புலிகள், தம்மை ஊட்டி வளர்ப்பவர்களை சிறிது உருட்டி மிரட்டினால், உறுமிடவும், மேலே பாய்ந்து கடித்திடவும் தயங்கப் போவதில்லை.

என்னை மனிதப் புலிகள் விரட்டி விட்டன என்று முன்பு, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறினார். கவனமிருக்கிறதல்லவா!

இப்போது வெளியேற்றப்படும் நிலைக்கு ஆளான குல்சாரிலால் நந்தாகூட, பெரிய முதலாளிகளின் சதி காரணமாகவே தனக்குப் பதவி பறிபோயிற்று என்ற கருத்துப்படப் பேசி இருக்கிறார்.

ஆகவே காங்கிரசுக் கட்சியை ஆட்டிப் படைக்கும் ஆதிக்கத்துடன் முதலாளிகள் உள்ளனர் என்பதும், அவர்களிலே கள்ளக் கடத்தல் பேர்வழிகளும், ஆட்சியாளர்களின் நேசத்தைத் தமது சுயநலத்துக்குப் பயன் படுத்திக் கொள்பவர்களும், சட்டத்திற்கு ஒவ்வாத முறையிலே பணம் திரட்டி சட்டத்தின் பிடியிலே சிக்கிடாது தப்பித்துக்கொள்பவர்களும், சர்க்காருக்கு விரயம் ஏற்படுத்துபவர்களும், சர்க்காருக்கு அஞ்ச மறுப்பவர்களும், எமது தயவில்லாமல் எப்படி காங்கிரஸ் கட்சி சர்க்கார் அமைக்க முடியும் என்று இறுமாப்புடன் கேட்பவர்களும் இருக்கின்றனர்; கொட்டமடிக்கின்றனர்.

இந்த நிலையில் மக்களின் உரிமையைக் காத்திடவல்ல ஜனநாயகமோ, வாழ்வினைச் செம்மைப்படுத்தவல்ல சோஷியலிசமோ எப்படிக் காப்பாற்றப்பட முடியும்? எங்ஙனம் வெற்றிபெற முடியும்? இத்தகையவர்கள் குறித்தும், இவர்களின் போக்கினாலே ஏற்படும் பெரு நஷ்டம் குறித்தும், பாராளுமன்றத்திலே அடிக்கடி பேசுகிறார்கள். தயக்கம் கலந்த சமாதானம்தான் தர முடிகிறதே தவிர காங்கிரஸ் அமைச்சர்களால், இவைகளை அடியோடு மறுத்துப் பேச முடியவில்லை.

இன்று இதழிலே பார்த்தேன், மற்றும் ஒரு ஊழல் என்ற தலைப்பிலே எழுதப்பட்டுள்ள ஒரு கண்டனத்தை.

பாதுகாப்புத் துறைக்குத் தேவையான மோடார் டையர்கள், சுமார் 25 இலட்ச ரூபாய் பெறுமானமுள்ளவை, சர்க்கார் நடத்தும் வணிகத் துறையினால் விற்கப்பட்டிருக்கிறது. இந்த டையர்கள் பழுதானவை! இவை இலாயக்கில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் துறையினரே அறிவித்துமிருந்தனர். என்றாலும் அந்த அறிவிப்பை வேண்டுமென்றே அனுப்பவேண்டிய அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்காமல், கெட்டுப்போன டையர்களை பாதுகாப்பு இலாகாவின் தலையிலே கட்டிவிட்டனர்!

இந்த கெட்டுப்போன டையர்களை ஐரோப்பிய நாடொன்றிலிருந்து தருவிக்கும் ஏஜண்டாக வேலை பார்த்தது ஒரு தனிப்பட்ட முதலாளியின் கம்பெனி.

அந்தக் கம்பெனியுடன் கூடிக்கொண்டு, கெட்டுப்போன டையர்களைப் பாதுகாப்பு இலாகாவுக்கு விற்று, பொருள் நஷ்டம் ஏற்படுத்துவதற்கு, சர்க்காரின் வணிகத் துறை உடந்தையாக இருந்திருக்கிறது.

ஏஜண்டு வேலை பார்த்த கம்பெனி, டையர்களை சோதனை பார்த்த அதிகாரி, விற்ற அதிகாரி ஆகியவர்கள் கூட்டாக இந்த மோசடியைச் செய்தனர் என்று பொதுகணக்குக் கமிட்டி சுட்டிக் காட்டி கண்டித்திருக்கிறது

இதுபோல நிர்வாகம் மோசமாகிக் கொண்டு வருவது எடுத்துக் காட்டப்படுகிறது.

காங்கிரஸ் சர்க்காரின் பெரிய சாதனை என்று விளம்பரம் செய்யப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள்பற்றி அவர்களே முன்பு காட்டிய ஆர்வத்தைக் காட்ட முடியவில்லை. ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன் ஏழைகளுக்கு வந்து சேரவில்லை என்பதை அவர்களே ஒப்புக்கொண்டுவிட்டுள்ளனர். இப்போது அவர்களிலேயே பலர் ஐந்தாண்டுத் திட்டங்கள் நடைமுறைக்கு ஒத்ததாகத் தீட்டப்படவில்லை என்றும், அவைகளை நிறைவேற்றுவதிலே போதுமான திறமை காட்டப்படவில்லை என்றும், திட்டங்களுக்காகச் செலவிடப்படுவதற்காகக் குறிக்கப்பட்ட பணம் மட்டும் அதே அளவு செலவாகிவிட்டிருக்கிறதே தவிர, திட்டத்தின் மூலமாக அடையப்போவதாகச் சொன்ன 'இலக்குகளை' அடைய முடியவில்லை என்றும், ஒப்புக்கொள்கிறார்கள்.

முகப்பில் :

தர்மபுரி - சேலம் மாவட்ட மாநாட்டு ஊர்வலக் காட்சிகள்.

(1965–66)

திட்டமிட்டது	கிடைத்தது
விவசாயப் பொருள் 100 மிலியன் டன்	74 மிலியன்
எண்ணெய்வித்து 9·8 மிலியன் டன்	7 மிலியன்
சணல் 62 இலட்சம் பேல்கள்	33·6 இலட்சம் பேல்கள்
பருத்தி 70·55 இலட்சம் பேல்கள்	52·65 இலட்சம் பேல்கள்
பொறுக்கு விதைத் திட்டம் 204 மிலியன் ஏகர்	164 மிலியன் ஏகர்
பாசன வசதி 29·5 மிலியன் ஏகர்	18 மிலியன்
மின்சாரசக்தி 29·5 மிலியன் கிலோவாட்	10·5 மிலியன் கிலோவாட்
எஃகுப் பொருள் 9·2 மிலியன் டன்	6·6 மிலியன்
பயிர் பாதுகாப்பு 50 மிலியன் ஏகர்	40 மிலியன் ஏகர்
பத்திரிகைத் தாள் 1·20 இலட்சம் டன்	30,000 டன்
சிமிட்டி 13 மிலியன் டன்	10·4 மிலியன்
நிலக்கரி 98·6 மிலியன் டன்	66 மிலியன்
இரும்புக்கனி 30 மிலியன் டன்	16 மிலியன் டன்
சர்க்கரை ஆலை யந்திரம் 140 கோடி ரூபாய் மதிப்பு	77 கோடி ரூபாய்
காகித ஆலை யந்திரம் 65 கோடி ரூபாய் மதிப்பு	18 கோடி ரூபாய்
டிராக்டர்கள் 10000	4000
வீடுகள் 4 இலட்சம்	2·2 இலட்சம்
டீசல் எஞ்ஜின் 1·66 இலட்சம்	84,800
போக்குவரத்து வண்டி 60,000	40,000

உடனடியாகப் பலன்தர முடியாத திட்டங்களுக்காகப் பெரும் பணத்தைச் செலவிடுவது, பண வீக்கத்தை உண்டாக்கி, அதன் காரணமாக விலைகளை அதிகப்படுத்தி, ஏழைகளை வாட்டி வதைக்கிறது என்பதையும் அவர்களே இப்போது ஒப்புக்கொண்டு பேசுகின்றனர்.

பெரிய அளவிலேயே திட்டங்கள் இருந்தாக வேண்டும் என்ற மயக்கத்திலிருந்து விடுபட்டாக வேண்டும் என்று இப்போது பேசுகின்றனர்.

உடனடிப் பலன் தரத்தக்க திட்டங்களுக்கே முதலிடம் தரவேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் நீண்டகாலமாகக் கூறிக்கொண்டிருப்பது இப்போதுதான் இவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

புவனேஸ்வர் காங்கிரஸ் மாநாட்டிலே தலைமைப் பேருரையில் காமராஜரே இதுபற்றிப்பேசி, நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்காகக் குறிக்கப்படும் தொகையின் அளவு குறைக்கப்படவேண்டும் என்றும், உடனடிப் பலன் தரத்தக்க திட்டங்களையே முதலிலே மேற்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அவருடைய யோசனையை ஏற்றுக்கொண்டதாகவும் தெரியவில்லை; பொருட்படுத்தியதாகக்கூடத் தெரியவில்லை.

திட்டத்துக்கான தொகை பெரிய அளவிலேயே அமைந்திருக்கிறது.

திட்டங்களும் உடனடிப் பலன் தருவனவாக அமைக்கவில்லை.

இவ்வளவுதானா என் பேச்சுக்கு நீங்கள் தரும் மதிப்பு, மரியாதை என்று காமராஜர் கேட்பதாகவும் தெரியவில்லை.

திட்டம் தீட்டுபவர்கள் தமது காரியத்திலே குறுக்கிடும் தகுதி காமராஜருக்கு இல்லை என்று வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லையே தவிர நடவடிக்கைமூலம் அதைத்தான் எடுத்துக் காட்டுகிறார்கள்.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்மூலம் நாட்டுக்குப் பெரிய வளம் கிடைத்துவிடும் என்று நம்பிக்கொண்டுவிடாதீர்கள் என்று நமது மாநிலத் தொழிலமைச்சர் வெளிப்படையாகவே பேசிவிட்டார்.

இந்த இலட்சணத்திலே உள்ள இந்தத் திட்டத்துக்கு, வெளிநாடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய கடன் தொகை உதவித் தொகை எந்த அளவு இருக்கும், எந்தெந்த முறையிலே கிடைக்கும், எப்போது கிடைக்கும் என்பது திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட முடியவில்லை.

அமைச்சர்கள் 'யாத்திரை' சென்றவண்ணம் உள்ளனர்; வரம் தருவதிலே காட்டும் ஆர்வம் நிறைவேற்றப்படுவதிலே காட்ட, பல நாடுகள் முன்வரவில்லை.

உதவி அளித்திட உருவாகியுள்ள அமைப்பு அடிக்கடி கூடுகிறது, விவாதிக்கிறது; புதிய புதிய பிரச்சினைகளை எழுப்புகிறது; உதவி அளித்திடுவதிலே தீவிரம் காட்டக்காணோம். கொடுத்த கடன் பெரிய அளவு — திருப்பித்தந்திடும் வாய்ப்பு எந்த வகையில் இருக்கிறது என்று, உதவி தந்திடும் நாடுகள் பேசிக்கொள்கின்றன.

அமெரிக்காவால்தான் இவ்வளவு பெரிய தொகை கடனாகவோ, உதவியாகவோ தர முடியும் என்று பிறநாடுகள் கூறுகின்றன.

எல்லாப் பளுவையும் எம்மையே சுமக்கச் சொல்லாதீர்கள், மற்ற நாடுகளும் தத்தமது வசதிக்கேற்ப உதவித் தொகை தந்திடவேண்டும் என்று அமெரிக்கா, பிறநாடுகளுக்குக் கூறுகிறது.

வாணிபம் நடாத்தி நொடித்துப் போய்விட்டவனிடம், பச்சாதாப உணர்ச்சி காட்டி, அவன் ஓரே அடியாக அழிந்து போய்விட்டால், முன்பு கொடுத்த கடனை திருப்பிப் பெற்றிட முடியாது, ஆசாமியை நடமாட விட்டு வாணிபம் நடத்த விட்டால்தான், ஏதாகிலும் சம்பாதித்து கடனை அடைக்க முடியும், அதற்காக அவன் வாணிபம் நடத்துவதற்குத் தேவைப்படும் பணம், கடனாகக் கொடுத்தாக்கானே ஆகவேண்டும் என்று பெரிய புள்ளிகள் வீழ்ச்சி அடைந்தவன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து பேசுவது போல

இந்தியாபற்றி, பணம் படைத்த நாடுகள் இன்று பேசுகின்றன.

நாட்டின் தன்மானம் மிகவும் சீரழிக்கப்பட்டு விட்டிருக்கிறது.

நாணயத்தின் மதிப்பைக் குறைத்தது, இந்தச் சீரழிவை அதிகமாக்கி விட்டிருக்கிறது.

சொல்வதற்குக் கூச்சமாகக்கூட இருக்கிறது, பாகிஸ்தானுக்குக் கடன் தருவதிலே இருக்கும் ஆர்வமும், கொடுத்த கடனைத் திருப்பிப் பெறலாம் என்ற நம்பிக்கையும் இருக்கும் அளவுக்கு இந்தியா விஷயத்திலே பிற நாடுகளுக்கு ஏற்படவில்லை.

பாகிஸ்தான் நாட்டுப் பொருளாதாரம் நலிவற்றதாகக் கருதப்படுகிறது; இந்தியாவின் பொருளாதார நிலைபற்றி அவ்விதமான எண்ணம் இல்லை.

சென்ற திங்கள் டில்லியில் நடைபெற்ற கலவரங்களைப்பற்றிக் கவலை தெரிவித்து எழுதிய வெளிநாட்டு இதழ்களெல்லாம்,

இத்தனைக் குழப்பத்தில் நாடும் நிர்வாகமும் இருக்கும்போது, மேலும் மேலும் கடன் கொடுத்தபடி இருக்கலாமா என்று கேள்வியே எழுப்பி விட்டிருக்கின்றன.

ரூபாயின் மதிப்பைக் குறைப்பதன் மூலம், ஏற்றுமதியை அதிகமாக்கிடலாம், அதன் பலனாக அன்னிய நாட்டுச் செலாவணித் துறைக்கு வலிவு தேடிக்கொள்ளலாம் என்று கூறப்பட்டது.

எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

ஏற்றுமதி வளரவுமில்லை.

இறக்குமதி குறையவும் இல்லை.

நாணயத்தின் மதிப்பைக் குறைத்ததாலே, முன்பு நாலாயிரம் கோடி என்ற அளவுக்கு இருந்து வந்த கடன்—வெளி நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய கடன்—இப்போது ஐயாயிரம் கோடியாக உயர்ந்து விட்டது என்றும்,

இந்த ஆண்டு வட்டியாக 120 கோடி ரூபாய் கட்டித்தீர வேண்டும் என்றும் இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் சவுத்ரி, நாலு நாட்களுக்கு முன்பு தெரிவித்துமிருக்கிறார்.

இதனைக் கவனிக்கும்போது, காங்கிரசாட்சி,

பட்ட கடனையும் கட்ட முடியாமல்,

புதிய கடனையும் பெற முடியாமல்

திண்டாட்டத்தைத் தேடிப் பெற்றுக்கொண்டு விட்டிருக்கிறது என்பதும் விளக்கமாகிறது.

இப்படி எந்த முனையிலிருந்து பார்த்திடினும், எந்தத் துறையை எடுத்துப் பார்த்திடினும், உற்சாகமோ நம்பிக்கையோ கொள்வதற்கு முடியாத நிலை இருந்து வருவது தெரிகிறது.

கவலையும் கலக்கமும் கசப்பும் மிகுந்திருக்கிறது; மறைக்க முடியாத அளவில்!

இந்த நிலைமையிலும், மக்களிடம் 'ஓட்டு' வாங்கிட முடியும் என்று காங்கிரஸ் கட்சி நம்பிக்கையுடன் இருக்கிறது. காரணம்? ஏழைகளை மடக்கிடும் சக்தியைத் தேடிப் பெற்றுக் கொண்டுள்ளோம் என்பதும், நாட்டிலே காங்கிரசுக்கு எதிர்ப்பாக உள்ள சக்தி, ஒன்றுவாக இல்லாமல், பல கட்சிகளாக உள்ளன என்பதிலே ஏற்படும் தெம்புமேயாகும்.

பல்வேறு கட்சிகள் ஒரே நாளில் ஒன்றுபட்டு ஒரே கட்சியாக ஆகிவிடப் போவதில்லை.

காங்கிரசிலிருந்து பிரிந்து வந்தவர்களேகூட, புதிய, தனிக்கட்சி அமைத்துக் கொண்டுள்ளனர்; ஏற்கனவே உள்ள ஏதாகிலும் ஒரு கட்சியில் சேர்ந்து அதனை வலுவுள்ளதாக்கிடும் செயலில் ஈடுபடவில்லை.

இந்தக் கட்சிகள் ஒவ்வொன்றும், தத்தமது எதிர்காலத்தையும் வளர்ச்சியையும் முதல் நோக்கமாகவே கொண்டு செயல்படுகின்றன.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் பொது நோக்கத்தில் அவை அக்கறையும் ஆதரவும் காட்டுகின்றன என்றாலும், ஒன்றுகிவிட ஆசையவில்லை. இசைவது முடியாததாகவும இருக்கிறது.

ஆகவே அவை ஒன்று ஆகாமல், பலவாக நின்று ஓட்டுகளைப் பங்கு போட்டுக்கொள்ள முனைகின்றன; இதன் காரணமாகக் கிடைத்திடும் ஓட்டுகளில் அதிக அளவுள்ள ஓட்டுகள் நமக்குத்தானே கிடைக்கும், நாமே மீண்டும் ஆட்சிக்குவந்து அமர்ந்துவிட முடியும் என்று காங்கிரஸ் நம்புகிறது.

கழகம், இந்தநிலை ஏற்படாது தடுத்திட இதயசுத்தியுடன் பாடுபட முனைகிறது. தோழமைத் தொடர்பு தேடுகிறது. தோழமைத் தொடர்பு தேடுவதாலே, நாங்கள் கேட்டிடும் தொகுதிகளை எமக்குத் தந்து விடவேண்டும் என்று பிற கட்சிகள் கேட்பது கண்டுகூட கழகம் கவலைப்படவில்லை; ஆனால் கழகத்திடம் கேட்டுப் பெற்றிடும் இடங்களிலே வெற்றி பெற்றிடும் வாய்ப்பும் வலிவும் அந்தக் கட்சிகளுக்கு இல்லாத நிலையில், தொகுதிகளைக் கேட்கின்றனவே என்பதைப்பற்றித்தான் கவலைப்படுகிறது.

தோழமைத் தொடர்பும் தொகுதி உடன்பாடும் காண வேண்டும் என்ற நிலை உருவாகாத முன்பேகூட, கழகம் வேண்டுமென்றே மும்முனைப் போட்டியை மூட்டிவிடக்கூடாது என்பதிலே அக்கறைகாட்டி வந்திருக்கிறது.

இப்போது கழகம் கூடுமானவரையில், மும்முனைப் போட்டியை எந்த அளவுக்குத் தவிர்க்க முடியுமோ அந்த அளவு தவிர்க்க வேண்டும் என்ற நோக்குடனேயே பணியாற்றுகிறது.

தொகுதி உடன்பாடு ஏற்பட முடியாத நிலையிலேகூட, மும்முனைப் போட்டியை மூட்டிவிடும் பாதகத்தையும் பழிச்செயலையும் மேற்கொள்ளக் கழகம் விரும்பப்போவதில்லை.

ஆனால் காங்கிரஸ் எதேச்சாதிகாரம், எதிர்க்கட்சிகள் பலவாக இருக்கும் நிலைமை எப்படியும் தனக்குச் சாதகத்தைத் தேடித்தரும் என்ற கணக்கினைத்தான் பெரிதாக நம்பிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலைமை எந்த அளவுக்குக் கவலைதராததாக ஆக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு ஜனநாயகம் வெற்றிபெற்றிட வாய்ப்பு இருக்கிறது.

இதிலே தம்பி! கழகத்துக்கு உள்ள பொறுப்பும் பங்கும் மிகப்பெரிது, என்பதனை உணர்ந்து நடந்து கொண்டாகவேண்டும்.

எல்லா எதிர்க்கட்சிகளும் ஒரே உருவம் கொண்டிட இயலாத நிலையில், நான் வலியுறுத்தி வந்திடும், விகிதாசார ஓட்டுமுறை செயல்பட முடியாத நிலையில், எதிர்க்கட்சிகள், தமக்குள் தோழமைத் தொடர்பு ஏற்படுத்திக்கொள்வது ஒன்றுதான், மேற்கொள்ளக் கூடிய முறையாக இருக்கிறது. இந்த முறை வெற்றி பெறவேண்டுமென்பதற்காக நாம் நேர்மையுடன் நடந்துகொள்ள உறுதிகொண்டிருக்கிறோம். ஆனால் அதேபோது, அமையும் எந்த ஏற்பாடும், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தத்தக்க வலிவு எங்கெங்கு எவரெவருக்கு இருக்கிறது என்ற அடிப்படையிலேயே, தொகுதி உடன்பாடு அமையவேண்டும், என்பதனை வலியுறுத்துகிறது.

இதன்மூலம் ஒரு பத்து இடங்கள் கழகத்துக்கு அதிகம் கிடைத்திடவேண்டும் என்பது அல்ல நமது நோக்கம். நிச்சயமாக அந்த எண்ணம் எழக்கூட இல்லை.

எவ்வளவு குறைத்து மதிப்பிட்டாலும், உள்ள எதிர்க்கட்சிகளில், தமிழகத்தைப் பொறுத்தமட்டில், கழகந்தான் அதிக இடங்களிலே காங்கிரசை எதிர்த்திடவும் வீழ்த்திடவும் வலிவும் வாய்ப்பும் பெற்றிருக்கிறது என்பதனை எவரும் மறுத்திடமாட்டார்கள்.

எத்தனை இடங்கள் என்பது அல்ல பிரச்சினை. எந்த இடங்கள் என்பதுதான் பிரச்சினை. எந்தெந்த இடங்களில், நீண்டகாலமாகக் கழகம் பதப்படுத்தி, பக்குவப்படுத்தி காங்கிரசை வீழ்த்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கி வைத்திருக்கிறதோ, அந்த இடங்கள் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டால் மட்டுமே, காங்கிரசை வீழத்தும் காரியம் வெற்றிகரமாக முடியும்.

இந்த நோக்கத்திலே உள்ள தூய்மையையும் நேர்மையையும், பிற கட்சிகள் உணரும்படிச் செய்வதிலே எனக்குப் போதுமான திறமை கிடைக்குமா என்பதே என் மனதினைக் குடைந்திடும் கேள்வி.

இதிலே எழக்கூடிய சிக்கலையும் சங்கடத்தையும் நான் உணராமலில்லை.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதற்கான முறையினை வகுத்திட, தொகுதி உடன்பாட்டினை அதற்கு ஏற்றபடி அமைத்திட, பிற கட்சிகள் மட்டும், நம்பிக்கை வைத்து, என்னிடம் ஒப்படைக்க முன்வருமானால்—!

பிற கட்சிகளிடம் என்னிடம் ஏற்பாட்டினை வகுத்திடும் பொறுப்பினை ஒப்புவித்துப் பாருங்கள் என்று கூறிடும் பெரிய நிலையும் செல்வாக்கும் எனக்கு இல்லை.

என்னுடைய தூய்மையையும் நேர்மையையும் மட்டுமே நான் தகுதிகளாகக் காட்ட முடியும்.

தொகுதிகளுக்கான உடன்பாட்டு ஏற்பாட்டினுக்கு மட்டும், எனக்குப் பொறுப்பினை, மனமுவந்தும நம்பிக்கையுடனும் பிற தோழமைக் கட்சிகள் அளித்திடுமானால், வெற்றிக்குப் பிறகு அமைக்கும் ஆட்சியிலே, கழகம் பிற கட்சிகளுக்கு முன் வரிசை இடம் விரும்பாது என்ற உறுதியைக்கூட நான் தர விரும்புகிறேன்.

காங்கிரசை வீழ்த்தியான பிறகு அமைக்கும் ஆட்சியிலே கழகத்துக்கு, அதன் வலிவுக்கும் எண்ணிக்கைக்கும் தகுந்த அளவு பங்கும் இடமும் கிடைக்குமா என்பதிலே எனக்கு இருக்கக்கூடிய அக்கறையைக் காட்டிலும், காங்கிரசு எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதற்கு ஏற்ற முறையில், பல்வேறு கட்சிகளுக்கிடையில் தொகுதிகளைப் பிரித்துத் தருவதிலே என் நோக்கத்திற்கு மற்றக் கட்சிகள் நம்பிக்கையுடன் இசைவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதிலேதான் நான் மிகுதியான அக்கறை கொண்டுள்ளேன்.

என் இதயத்தைக் காணும்படிச் செய்திடும் வழியாது என்பதறியாது திகைக்கின்றேன். காங்கிரசு எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதற்கான போர் முறையை வகுத்திடுவதாகக் கருதி தொகுதிகளைப் பிரித்துக்கொள்வதிலே என் கருத்தினைப் பிற கட்சிகள் ஏற்றுக் கொள்வார்களானால், வெற்றி பெற்றிட முடியும் என்ற ஓர் உள்ளுணர்வு வலிவுடன் இருந்து வருகிறது. அதனை மெய்ப்பிக்க ஓர் வாய்ப்பு அளிக்கும்படி தோழமைக் கட்சிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

சீர்வரிசை!

வரிசைக்குத் தமிழ் நாட்டில் பஞ்சமில்லை
வாழ்ந்தவர்கள் சீர்வரிசை தூக்கிச் செல்வர்,
பரிசுக்கு நம்புலவர் வரிசைக் கூட்டம்
பாராளும் மன்னவனை நாடிச் செல்லும்
தரிசுக்கு நல்லுழவர் நாளும் இன்பம்
தருகின்ற நல்வரிசை செல்லும் நாட்டில்,
அரிசிக்குச் செல்கின்ற வரிசைக் காட்சி
"அவமானச் சீர்வரிசை" நாட்டிற் காகும்!

போர்வரிசை பகைநாடு செல்லும், போரில்
புறங்காட்டி மாற்றரசர் வரிசை ஓடும்
சீர்வரிசை, பகையரசர் தருவ தற்கே
செல்வமுடன் வந்திங்கே கூடும், நல்ல
தேர்வரிசை வீதிவழிச் செல்லும், பக்கம்
தேனிதழ்ப்பெண்கள்வரிசை நிற்கும் நாட்டில்
ஊர்முழுதும் உணவுக்கு வரிசைக் காட்சி,
உலகத்தின் "அவமான வரிசை" யாகும்!

சீர்வரிசை, போர்வரிசை, கண்ட நாட்டில்,
சீனிக்கும், அரிசிக்கும் வரிசை யென்றால்
ஏர்வரிசை, தேர்வரிசை, கண்ட நாட்டில்,
எண்ணெய்க்கும், உணவுக்கும் வரிசை யென்றால்,
யார்தந்த திவ்வரிசை? காங்கிர சாட்சி
எமன் தந்த தென்றறியும் போது, மக்கள்
சீர்வரிசை "வாக்காகும்" கழகத் திற்குச்
செய்திடுவோம், இவ்வரிசை காணச் செய்வோம்.

புலவர் - தாமரையான்.

2 – 28

"வல்லூருக மாருதீர்!"

வீரர்கள் கையில் சிக்கிக்கொண்ட குலசேகரனைக் கண்டதும், வாய்விட்டு அலறிவிட்ட திருமேனி, சில நொடிகளில் தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொண்டு, பெருமூச்சு விட்டபடி உள்ளத்தில் குடியேறியவனின் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

கன்னிப் பெண் ஒருத்தி, கட்டழகன் ஒருவன்மீது காதல் கொள்கிருள்' காலம் போடும் நடையில், அவர்களின் காதலும் வளர்ந்து கொண்டே வருகிறது! ஒரு நாள் அந்தக் காதலனின் பெற்றோர் பெண் கேட்க வருகிருர்கள்—அந்தக் காதலியின் இல்லத்திற்கு!

அச்செய்தியை அறிந்த அந்தச் சேல்விழியாளின் உள்ளம் கூத்தாடுகிறது. கட்டாணி முத்தம் தந்தவன், கன்னியுள்ளத்தில் வந்து நின்று புன்னகை செய்கிருன். அவளது கையிலுள்ள சங்கு வளையல்கள் தாமாகக் கழன்று தரையில் விழுகின்றன.

திருமணத்திற்கு நாளும் வைத்தாகிவிடுகிறது. அந்தத் தித்திப்புச் சொல்லாளின் மகிழ்ச்சிக்கோர் எல்லையில்லை.

நாளை திருமணம். இன்று அவள் பல்லக்கில் மணமகன் இல்லத்திற்குச் செல்லுகிருள். பல்லக்கிலா அவள் செல்கிருள்—இல்லை—இறகு அசைக்கும் ஏதோ பெரிய பறவையின்மீது ஏறிக்கொண்டு வான வெளியில் மிதந்து செல்கிருள்!

இரவு உருவாகிறது — வளருகிறது—தேய்கிறது! பொழுது புலர ஆரம்பிக்கிறது! மணப் பாகிறது தன் வாழ்வும் என்று அந்த இளம் பெண்ணின் இதயம், களிப்புக் கடலாடுகிறது!

புள்ளினங்கள் பாடுகின்றன—புறப்படுகிருன் ஆதவன்! உற்ருர், பெற்ருேர், ஊரார், உறவினர் நல்லோர், கலைவல்லோர் — திருமண இல்லத்தில் குழுமியுள்ளனர்.

மணப் பந்தலில் மனங் கவர்ந்தவனின் பக்கத்தில் அமருகிருள். அந்த மான் விழியாள்! மங்கல இசை முழங்குகிறது! மங்கல நாணை எடுத்து அந்தப் பெண் புருவின் கனகவொளிக் கழுத்தில் சூட்டுகிருன், அந்தக் கட்டழகன்!

"எவ்வளவு இன்பம்! எவ்வளவு இன்பம்! அதைத் தாங்க இந்த ஒரு இதயத்தால் முடியவில்லையே" என்று ஆனந்தக் கண்ணீர், அவளது பட்டுக் கன்னங்களைக் குளிரச் செய்கிறது!

"பகலே நீ ஓடாயோ! இரவே நீ வாராயோ! கற்கண்டு அத்தானுேடு கட்டிலில் கொஞ்சி மகிழ என் உள்ளம் துடிக்கிறதே! இரவு வந்ததும் அத்தான் இந்த அறையினுள் வந்து, கதவைத் தாளிட்டுவிட்டுக் கட்டிலில் என் பக்கத்தில் அமர்வார்! நான் கொஞ்சம் நகர்ந்து கொள்வேன்! அப்புறம்......என்று கற்பனை புரியின் தேன் ஆற்றில் நீந்திக்கொண்டிருக்கிருள்!

"அய்யோ!" என்று ஓர் அலறல்! அதைக் கேட்டதும் அறையை விட்டு வெளியே ஓடி வருகிருள்.

மணந்தவனை இருவர் தூக்கிக் கொண்டுவந்து கிழே கிடத்தியதைப் பார்த்துப் பதறிப்போகிருள்.

"என்ன அத்தான் தங்களுக்கு?" என்று கதறுகிருள்

மாலையில் ஆற்ருேரமாகச் சென்றவனைப் பாம்பு கடித்துவிட்டது—இறந்துவிட்டான்—என்று பக்கத்திலுள்ளோர் கூறுகிருர்கள்.

"இறந்துவிட்டாரா?" என்று தலையில் தகையை மோதிக் கொள்கிருள். 'காலைதானே அத்தான் மாலையிட்டார் — இன்று மாலையே என் கழுத்து வெறுங் கழுத்தாகி விட்டதே! அய்யோ!' என்று தலையை இடித்துக் கொள்கிருள்—வயிற்றில் அடித்துக் கொள்கிருள்.

காலையில் மணந்தவனை அன்று மாலையே பறிகொடுத்து விட்டுப் பதறி அழுத அந்தப் பெண்ணின் நிலைக்கும், இப்பொழுது திருமேனியின் நிலைக்கும் வித்தியாசமே கிடையாது. மணந்தவனின் உடலின்மீது அவள் புரண்டழுதாள்—இவளோ புரண்டழாமல் புழுங்கும் உள்ளத்தோடு சிலையாகிவிட்டிருக்கிருள்.

முனிவர் மண்டபத்தில் சிறிது நேரத்திற்கு முன்பு, பாண்டியனின் மார்பும் தன் மார்பும் இணைந்தபோது அவள் எவ்வளவு இன்பம் அடைந்தாள்! குளக்கரையைவிட்டு ஓடிய தன்னை அருவிச் சிரிப்போடு அவன் துரத்தியதையும், கொங்கு மந்தாரையின் அடியில் இறுக அணைத்துப் பருவத் துடிப்பை அதிகரிக்கச் செய்ததையும், குன்றின் மீது காட்டு ரோஜா மலரைக் கூந்தலில் சூட்டி கையைப் பிடித்து மெய் மறக்கச் செய்ததையும் — அவள் ஒரு கணம் நினைத்துப் பார்த்தாள். அவள் உடல் சிலிர்த்தது. உள்ளம் சோகக் கிணற்றின் ஆழத்தைப் பார்த்துப் பாய்ந்தது.

அந்த இளங் குமரியின் இதயத்தில் குமுறிய காதல், செவ்விதழ்களை நீக்கிக்கொண்டு 'அத்தான்!' என்ற வார்த்தையாக வெளியே ஓடிவந்தது.

"திருமேனி" என்று குலசேகரன் ஒருமுறை அழைத்துவிட்டு, கண்களை மூடிக்கொண்டான்.

விக்கிரமன், காஞ்சனமாலை, திருமேனி ஆகிய மூவரும் அவன் மனத் திரையில் மாறி மாறி வந்து கண்ணீர் விட்டுக் கதறினர்!

"அத்தான்!"

தேம்பிக்கொண்டே அவனை நெருங்கினுள்.

அவன் கைகளைப் பிடிக்கத் தன்னிரு கைகளை நீட்டியபோது, 'திருமேனி!' என்று பின்னுலிருந்து இடியிடிப்பது போன்ற ஒரு குரல் கேட்டது.

கண்களைத் திருப்பினுள். கடுங் கோபத்தோடு கனகசேனன் அவளை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தான்.

"என்ன வேண்டும்?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள். அருகில் வந்து நின்ற கனகசேனனைப் பார்த்து.

"நீ அறிவோடு நடந்துகொள்ள வேண்டும்!" என்று முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டே அவன் கூறினான்.

"பைத்தியக்காரிக்கு எங்கேயாவது அறிவோடு நடந்துகொள்ளத் தெரியுமா? அப்படி நடந்துகொள்ளத் தெரிந்தால், அவளை எப்படி பைத்தியக்காரி என்று கூற முடியும்?" என்றாள் திருமேனி.

"பைத்தியக்காரியா நீ? ஆமாம் காதல் பைத்தியம்! எல்லாவற்றையும் இப்பொழுதுதான் நான் அறிகிறேன்!"

"திடீர் ஞானோதயமோ?"

"ஞானோதயம் வேறு உண்டாக வேண்டுமா, உங்களது இந்தக் கள்ளத்தனமான காதலிதயத்தைத் தெரிந்துகொள்ள? சண்டாளி! உன் சாகசத்தைப் புரிந்துகொள்ள சாதாரண அறிவே போதுமே!"

"சாதாரண அறிவே போதும்—யார் இல்லை என்றது? ஆனால் இருக்கவேண்டுமே அது!"

"என்ன திமிர்? என்னை அறிவற்றவன் என்று கூறுகிறாய்?"

"கூற என்ன இருக்கிறது. இளவரசே! வேம்பில் தித்திப்பையும், வேனில் குளிர்ச்சியையும், கள்ளில் நறுமணத்தையும் காகத்தினிடம் கீதத்தையும் எப்படி யாரும் எதிர்பார்க்கமாட்டார்களோ—அப்படியே இந்தக் கனகசேனனிடமும் நான் அறிவை எதிர்பார்க்கவில்லை!"

"ஆமாம்! வெண் முகிலில் மழையையும் வேசி மகளிடத்தில் கற்பையும் நான் எதிர்பார்க்கவில்லை!' என்று கனகசேனன் சொல்லி முடித்ததும். 'யாரடா வேசி மகள்' என்று திருமேனி ஆத்திரத்தோடு அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை தந்தாள்.

ஆத்திரங்கொண்ட ஆரணங்கு கன்னத்தில் அறைந்ததையும், அந்த அடியைப் பெற்ற கனகசேனன் போர் வீரர்களையும் தன்னையும் பார்த்து அவமானத்தால் உடல் குன்றியதையும் கண்டு குலசேகரன் தன் சோகத்தையும் மறந்துவிட்டுச் சிரித்தான்.

"வெட்கம்! வெட்கம்! சேரநாட்டு இள்வரசருக்குப் பெருத்த வெட்கம்!" என்று குலசேகரன் கலகல வெனச் சிரித்தான்.

"இன்னமும் ஏன் இவனை இங்கேயே வைத்திருக்கிறீர்கள்—இலங்கை அரசரிடம் இழுத்துச் செல்லுங்கள்!' என்று கோபத்தில் கத்தினான், கனகசேனன்.

குலசேகரனைப் போர் வீரர்கள் இழுத்துக்கொண்டு சென்றார்கள்.

"யார் இவரது தலையை வெட்டி கோட்டை மதிலின் மேல் வைக்கத் துடித்துக்கொண்டிருக்கிறாரோ, அவரிடமே அல்லவா இவரைக் கொண்டுபோகிறார்கள்!" என்ற எண்ணத்தோடு, திருமேனி கண்ணீர் வழிய நின்ற இடத்திலேயே நின்றிருந்தாள்.

இழுத்துச் செல்லப்படும் ஆணழகனைத் தவிர, சுற்றுப்புறமொன்றும் அவளது பார்வையில் விழவில்லை. எங்கும் இருள் கவிழ்ந்துவிட்டதைப் போலவும், அவளது இதயத்தினின்றும் வெளியே புறப்பட்ட ஓர் ஒளிக்கதிர் அந்தக் காரிருளின் நடுவே அசைந்தாடி அடிவானத்தை நோக்கிச் செல்வதைப் போலவும்—அவளுக்குத் தோன்றியது. அந்த ஒளிக்கதிர் தூரமாகச் செல்லச் செல்ல தன் இதயத்தினுள் இருள் கனப்பதாக உணர்ந்தாள்.

அந்த ஒளிக்கதிர் மின்மினிப் பூச்சியைப் போலச் சிறியதாகத் தேய்ந்து மறைந்துவிட்டது.

"அத்தான்!" என்று தன் இரு கைகளாலும் கண்களை மூடிக்கொண்டு தேம்பினாள்.

"திருமேனி!"

"யாரது?" என்று சோகத்தோடு கேட்டவாறு கண்களைத் திறந்தாள்.

கனகசேனன் தன்னையே இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டதும் ஆத்திரம் அவள் உள்ளத்தில் தாவியது.

"அவர்களோடு நீர் போகவில்லையா? இவ்வளவு நேரமும் இவ்விடத்திலா நீர் இருக்கிறீர்?"

"எதற்காக திருமேனி, இப்படி ஆத்திரமும் வெறுப்பும் அடைகிறாய்?"

"உம் வேலை முடிந்துவிட்டதல்லவா—இன்னமும் இங்கே ஏன் இருக்கவேண்டும்?" என்று ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, சாந்தமான குரலில் அவள் கேட்டாள்.

"திருமேனி! ஆத்திரத்தில் நான் ஏதாவது பேசியிருந்தால், மன்னித்துக்கொள்!"

"நான் பைத்தியக்காரி அல்ல ....!"

"அதை நான் அறிந்துகொண்டேன்—அடைகிறேன் பெருமகிழ்ச்சி, திருமேனி!'

'நான் பைத்தியக்காரி அல்ல, ஆகவே சுய அறிவோடே இருக்கிறேன்—சுய அறிவோடே சிந்திக்கிறேன்—சுய அறிவோடே பேசுகிறேன்—என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்!'

"உன் பேச்சு எனக்குப் புரியவில்லையே திருமேனி!"

"என் பேச்சு புரியவேண்டுமென்ற அவசியமில்லை? ஆனால் என் செய்கை புரிகிறதல்லவா? திருமேனி யார் என்று தெரிந்துகொண்டீர் அல்லவா?'

"ஆத்திரத்தோடு நீ பேசியதைவிட, இப்படி நிதானமாகப் பேசும் பேச்சுத்தான் என்னைக்கொல்கிறது திருமேனி"

"ஏன் இப்படிப் பயத்தோடு என்னைப் பார்க்கிறீர்? நான் பைத்தியக்காரி அல்ல என்பதை முதலிலேயே உமக்குச் சொல்லிவிட்டேனே! கண்டபடி பேசுவேன் என்றோ—கல்லால் அடிப்பேன் என்றோ—பயப்படாதீர்கள்! திரும்பவும் கேட்கிறேன், நான் யார் என்று தெரிந்துகொண்டீர் அல்லவா? எதற்காக விழிக்கிறீர்? நான் யார்?"

"இதென்ன கேள்வி, திருமேனி?"

"இதுவா—உம் மனமயக்கத்தைப் போக்கும் கேள்வி! கனகசேனனைக் கனகசேனனாயும், திருமேனியைத் திருமேனியாயும் தலைநிமிர்ந்து நடக்கும்படிச் செய்யக்கூடிய கேள்வி! நான் யார்? நீர் யார்?—ஒரு கணம் யோசித்துப்பாரும்; இதென்ன இவள் வேதாந்தம் பேசுகிறாளே என்று எண்ணுகிறீரா? ஆமாம் வேதாந்திகளின் மனத்தைப்போலவே என் மனமும் சூனியமாகிவிட்டிருக்கிறது! அந்தச் சூனிய வெளியிலிருந்து எழும் குரல் இருக்கிறதே அது மிகவும் சக்தி வாய்ந்தது!"

"என் மனத்தைக் குழப்பாதே, திருமேனி!"

"குழப்பவில்லை நான்—குழம்பியுள்ள மனத்தில் தெளிவை உண்டாக்கவே பேசுகிறேன்! என்னை மணஞ் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆசையினால் தாங்கள் பல நாள் காத்திருக்கிறீர்! உம்மை மருமகனாகப் பெற்று—அதன் மூலம் சேர, சோழ, பாண்டிய மண்டலங்களை ஒரே குடையின் கீழ் கொண்டு

வந்து, அந்தப் பரந்த சாம்ராஜ்யத்தின் ஏகச்சக்ராதிபதியாகக்கொஞ்ச காலமாவது செங்கோல் ஏந்த வேண்டுமென்று, என் தந்தை துடி துடித்துக்கொண்டிருக்கிறார்! அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ள என்னை ஒரு சூதாட்டக் காயாகப் பயன்படுத்த அவர் திட்டமிட்டார்! அந்தத் திட்டத்தை நான் எதிர்த்தேன்! அப்படி நான் எதிர்த்ததற்குக் காரணம், பாண்டிய மன்னர் மீது நான்கொண்ட காதலேயாகும்! பராக்கிரமபாண்டியருக்கு இலங்கையிலிருந்து உதவிப்படை சென்றது, நினைவிருக்கிறதல்லவா? அந்தப்படையோடு நானும் சென்றிருந்தேனே? ஆண் உடை தரித்து நான் போர்க்களத்தில் குதித்தேன்! வாளைச் சுற்றி எதிரிகளின் தலைகளைத் தரையில்உருளச்செய்தேன்! மலர்ந்த பூக்களைக் கிள்ளியெடுக்கவும், கட்டிய கணவனின் கால் பிடிக்கவும், தொட்டிலாட்டவுமே ஆரணங்குகளின் கைகள் பயன்படும் என்று புல்லறிவாளர்கள் புறநானூற்று வீராங்கனைகளை மறந்துவிட்டுப் பேசி வரும் இந்நாளில், மலர் பறிக்கவும், மணந்தவனின் கால் பிடிக்கவும், மட்டிலா மகிழ்ச்சி தரும் மகவைத் தொட்டிலில் போட்டாட்டவும் தெரிந்த அதே கரங்கள், மாற்றாரின் தலைகளை வெட்டிச் சாய்க்கவும் வல்லமை வாய்ந்தவை என்ற உண்மையை நிலை நாட்ட உறுதிகொண்டேன்! வளையல் அணிந்த கைகள், வாளேந்தும்! அன்ன நடைபோடும் அனிச்ச மலர்ப் பாதங்கள், மண்டை ஓடுகளின் மீதும் நடந்து செல்லவும் தயங்காது என்ற ஆற்றலை வையம் உணரச் செய்யவேண்டும் என்ற பேரவாவினால், பாண்டியநாட்டுப் போர்க்களத்தில் இரத்தச்சேற்றில் நான் நடந்தேன்! அப்படி நான் வாள் சுற்றியநேரத்தில், இருகண்கள் என் இதயத்தினுள் புகுந்து சுற்ற ஆரம்பித்தன! எதிரிகளின் பிணங்களின்மீது வீரத் தாண்டவமாடிய அஞ்சா நெஞ்சன் குலசேகரனது கண்கள் தாம் அவை என்பதை நான் சொல்லாமலேயே நீர் புரிந்து கொள்ளலாம்! அவரது வீரம் என் மனத்தைக் கவர்ந்தது! அவரது அழகுமுகம், என் இதயத்தில் அவருக்கென்று ஒரு தனி இடத்தைப் பிடித்துக் கொண்டது! இலங்கை திரும்பிய நான் — அப்பாவின் திட்டத்தை அறிந்தேன்! குலசேகரன் குடி புகுந்த இதயத்தில், நான் எப்படி உமக்கு இடமளிக்க முடியும்?



ஆகவே அப்பாவின் திட்டத்தை எதிர்த்தேன்! மண்ணாசை பிடித்த அவர், மகளின் சொல்லை ஏற்றுக் கொள்ளவும், கண்ணீருக்கு இரக்கங்காட்டவும் மறுத்துவிட்டார்! உமக்கும் எனக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது! என்ன செய்வதென்று புரியாமல் நான் ஏங்கித் தவித்த நேரத்தில், என் தோழி ஒருத்தி ஒரு யோசனை சொன்னாள். அதன்படியே நான் பைத்தியக்காரியைப்போல நடிக்க ஆரம்பித்தேன்! திருமணம் தடைபட்டது! ஆனாலும் என் தந்தையைத் திருத்த முடியவில்லை!''

“திருமேனி......!”

“நீங்களாவது உங்கள் மனதை மாற்றிக்கொள்ளுங்கள்—மற்றொருவனின் காதலியின்மீது ஆசைப்படுவது கீழ்ச்செயல் என்பதால்!''

“என் தலை சுற்றுகிறது திருமேனி!”

“ஆமாம், ஏமாற்றத்தின் எதிரொலி, எப்படிப்பட்டவரையும் சிறிது நிலைகலங்கத்தான்செய்யும்!''

“என்னை முட்டாள் என்று எண்ணிக்கொள்ளாதே, திருமேனி! நீ ஏதோ சூதுத்திட்டத்தோடு பேசுகிறாய்''

“சூதுத்திட்டமா? இல்லையே! சுலபத்தில் புரியும்படியாகத்தானே சொல்கிறேன் — எனக்கும் பாண்டிய மன்னருக்கும் காதல் என்று அறிந்த பிறகும், அந்த காதல் புறாக்களை விரட்டும் வல்லூறாக மாறுகிறீர்கள் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்!'

“உன் மனத்தை மாற்றிக்கொள் திருமேனி — பகைவன்மீது காதல் கொள்வதும், பாம்போடு விளையாடுவதும் எப்பொழுதும் ஆபத்தானவை!''

“இதோ, என் கழுத்திலிருக்கிறதே முத்துமாலை, அதுவல்ல இளவரசரே காதல் என்பது — விருப்பமில்லாவிட்டால் கழற்றி எறிந்துவிட்டு வேறொன்றைப் போட்டுக்கொள்ள'' என்று சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டுத் திருமேனி வேகமாக நடந்தாள்.

அரண்மனையினுள் நுழைந்த திருமேனி, “குலசேகரா!” என்ற அவளது தந்தையின் குரலைக் கேட்டதும் ஒரு நொடி தயங்கி நின்றுவிட்டாள். மறு நொடியே அவளது கால்கள் வேகங்கொண்டன.

விசாரணை மண்டபத்தினுள் நுழைந்து, ஒரு திரையின் மறைவில் நின்று, அவள் நடப்பவற்றைக் கவனித்தாள்.

“குலத்துரோகியே, மண்டைக் கர்வம்பிடித்தவனே! உனக்கு எவ்வளவு துணிவு இருந்தால், அன்றொரு நாள் என்னையே நீ ஏமாற்றியிருப்பாய்?'' என்று கொக்கரித்தான் பராக்கிரமபாகு.

“சிங்கத்தின் துணிச்சல் நரிக்குத் தெரியாததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!'' என்று அலட்சியத்தோடு குலசேகரன் சொன்னதும், “என்ன சொன்னாய்? நரியா? நானா?'' என்று இலங்கை அரசன் வாளை உருவியபடி, அவனைநோக்கி நடந்தான்.

அதைக்கண்டு நடுநடுங்கிப்போன திருமேனி, “அப்பா வேண்டாம்!'' என்று தன்னையும் மறந்து கதறிவிட்டாள்.

(வளரும்)

சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.